Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி 28 ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ௵ ஆடி ௴ ௧௯ உ வெள்ளிக்கிழமை (3 AUGUST 1956) [இல- ௨௭]

# விமோசனத்துக்கு வழி வேற்றுமை நீக்கி வீரஒற்றுமை உண்டாக்குதலே

—————0—————

## ஆர்வத்தை ஒருமுகப்படுத்தல் அத்தியாவசியம்

—————0—0—————

( கொழும்பிற் சென்றவாரம் நடந்த ஒற்றுமை மாநாட்டில் தலைமை வகித்த திரு. S. H. பேரின்ப நாயகம் அவர்கள் செய்த சொற்பெருக்கு )

இதற்கு முன் எமது நாட்டையாண்ட எந்த ஒரு அரசாங்கமும் செய்யாத இன்னல் ஒன்றை இன்றைய அரசாங்கம் தமிழ்ப் பேசும் மக்களுக்குச செய்து விட்டது. தனிச் சிங்களச் சட்டத்தால் தமிழ் மொழிக்கும் அம்மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட 25 இலட்சம் மக்களுக்கும், செருப்படி கொடுத்துவிட்டது.

தமிழ்ப் பேசும் இனம் உரிமை குறைந்த இனமாகி விட்டது. தனது தாய் நாட்டிலேயே மானமிழந்து வாழும் நிர்ப்பந்த கதியை அடைந்திருக்கிறது. இந்த இழிநிலையை உன்னி உன்னிப் பொது மக்களுள்ளம் வெதும்பியபோதும் யாது செய்வதென்று தெரியாது மனம் அல்லோலகல்லோலப்படுகின்றது. மக்களிடத்தும், மக்களுக்குவழிகாட்டும் பொறுப்பையுடைய தலைவரிடத்தும், கருத்து வேற்றுமை இருத்தல் இயல்பே. இதைப்பற்றி மார்படித்துப் புலம்புவதிற் பயனில்லை. ஆனால் ஒரு இனத்தைச் சேர்ந்த யாவரையும், ஒரே முறையில் ஒரே யளவில் தாக்கும் ஒரு நிகழ்ச்சி நிகழும்போது கட்சி வேற்றுமையை ஒதுக்கி வைத்து யாவருக்கும் வந்திருக்கும் இழிவையகற்ற வழிதேடுவதே இதுபோன்ற நெருக்கடி வேளைகளில் செய்ய வேண்டியது கட்சிப் பற்றையோ, கட்சிக்கொள்கைகளையோ துறக்கவேண்டியதில்லை. நெருக்கடி நீங்கியவுடன் முன்போலத் தத்தம் கருமங்களில் ஈடுபடுதலே இன்றைய நிலையில் தேவை.

இது யாவரும் அறிந்த ஒன்று. விளக்கவோ வற்புறுத்தவோ வேண்டியது ஒன்றல்ல. பொதுமக்களிடம் தாய்மொழி அபிமானம் உண்டு. ஆர்வமுமுண்டு. மொழிக்காகவும் தன்மானத்திற்காகவும், தியாகஞ் செய்யத் துணிவுமுண்டு. உணர்ச்சி பொங்கிக்கொண்டிருக்கிறது. செயல் முறையில் ஆர்வத்தைக் காட்ட ஆவலுண்டு. ஆனால்இந்த ஆர்வத்தையும் அபிமானத்தையும் ஒருதுறைப்படுத்தித் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் ஒருமுகப்படுத்தி எதிர்ப்பியக்கத்தை ஒருமுனைப்படுத்துவதேதலைவர்கள் தமிழ்ப் பேசும்மக்களுக்குச்செய்யக் கூடிய, செய்ய வேண்டிய, தொண்டும் கடமையுமாகும். வேறு அரசியல் அம்சங்களைப்பற்றி எமக்குள் வேற்றுமைஇருந்த போதிலும், இந்நாட்டிலே தமிழுக்குச் சிங்களத்துக்குப் போல உரிமையிருந்தாலே, எம்மக்கள் தங்கள் மானம் பங்கமடையாதிருக்கலாம் என்பதைப் பற்றியோ வேற்றுமையாதுமில்லை.

ஒரு நாட்டு மக்களிடையில என்ன வேற்றுமை இருந்தபோதிலும், வேற்று நாட்டுடன் போர் ஏற்படும் போது வேற்றுமைகளைப் பாராட்டாது அந்நாட்டவர் ஒன்று சேர்ந்து போர் முயற்சியிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பர். இரண்டாவது உலக யுத்தம் ஏற்பட்டபோது இங்கிலாந்திலே இரு அரசியல் கட்சிகளிருந்தன. சமூக - அரசியற் கொள்கைளில் இருகட்சிகளுக்கும் இருந்த கருத்து வேறுபாடு, கிழக்குக்கும் மேற்குக்கும் இருக்கும் வேற்றுமை போன்றது. ஆயினும் போர்க்காலம் என்றபடியால் இங்கிலாந்து மக்கள் யாவரும் ஒருமுனைப்பட்டுத், தம் நாட்டிற்கு வந்த நெருக்கடிக்கு விமோசனம் தேடவேண்டிய, நிலை ஏற்பட்டது. கட்சி வேற்றுமைகளை ஒருபுறம் ஒதுக்கினர். திரு. சேர்ச்சில் பிரதமரானர். திரு. அட்லியை உப பிரதமராக வரும்படி அழைத்தனர். அழைப்பை அவர் ஏற்றார். கட்சி அரசியல் கைவிடப்பட்டது. இரு கட்சியிலுமிருந்தும் மந்திரிமார் தெரியப்பட்டார்கள். இடைத் தேர்தல்கள் நிகழ்ந்தபோதெல்லாம் போட்டியின்றி இரு கட்சியாரும் செய்த ஒப்பந்தப்படி பாராளுமன்ற உறுப்பினர் தெரியப்பட்டனர். கட்சிப் பொது உறுப்பினரோ தலைவரோ மற்றக் கட்சியைத் தாக்கவில்லை. நெருக்கடியான காலம், நாட்டின் கதியோ அதோ கதியாக வரும் என்று மக்கள் ஏங்கின காலம், கட்சிப் போருக்கிடமில்லாதகாலம் என்பதைப் பொதுமக்களும், தலைவர்களும் உணர்ந்தனர். தம்முணர்ச்சிக் கேற்பச் செயலாற்றினர். இன்று தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும் இத்தகையதே. கட்சிப் போருக்கு இடமில்லை தமிழர் கதியும் தமிழரின் கதியும் தமிழ்பேசும் ஏனையோரின் கதியும் அதோகதியாய் முடியுமோ என்றேங்கும் காலம் இது.

பொதுத்தேர்தலுக்கு முன் ஐக்கியமுன்னணியை உருப்படுத்தும் முயற்சியில் பல தலைவர்கள் உழைத்தனர். ஆனால் முயற்சியோ கைகூடவில்லை. "தேர்தல் முடியட்டும் பொது மக்கள் தங்கள் தலைவர்களைத் தெரிவதற்கும் தங்கள் கருத்தைத் தெரியச்செய்வதற்கும் தேர்தலைப்போல் வாய்ப்புக் கிடைப்பதரிது. ஆகையால் பொதுத்தேர்தல் முடிந்தபிற்பாடு பொது மக்கள் தெரிந்தவர்கள் ஒன்று சேர்ந்து ஐக்கிய முன்னணியை உருவாக்கலாம்" என்று பலர் கூறினர். தேர்தல் முடிந்தது. பொதுமக்கள் கருத்தும் தெரியவந்தது. ஐக்கிய முன்னணியோ தோன்றவில்லை.

தமிழ்ப் பெரியார் பலர் முயன்றும், கைகூடாத ஒன்றைக் கையேற்க நான் அஞ்சினேன். வடமாகாணத் தலைமை ஆசிரியர் சங்கம் இம்முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும், சிலர் கருதினர். சங்கமென்ற முறையில் ஈடுபடுவது நன்றே அல்லவோ, என்பது பற்றியும் அபிப்பிராய பேதம் இருந்தது. ஆகையால், சங்கத்தை ஈடுபடுத்தாது தாமே தனிப்பட்ட முறையில் ஒன்றுகூடி இக் கடமையைச்செய்யவேண்டுமென்று பின்வரும் கல்லூரிகளின் அதிபர்கள் நிர்மானித்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சஞ்சவான் கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி, காட்லிக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, இக் கல்லூரிகளின் அதிபர்களுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூர், வைத்தீஸ்வர வித்தியாலயம், மகாஜனக் கல்லூரி அதிபர்களும பின் சேர்க்கப்பட்டனர்.

தமிழ் ஐக்கிய முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தை நானே கூட்டி வைக்க வேண்டுமென்று அவர்கள் தீர்த்தனர். அவர்கள் தீர்ப்பின்படி நான் பின்வரும் தமிழ்த் தலைவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பினேன். திரு. எஸ்.ஜே. வி. செல்வநாயகம், திரு. ஜீ ஜீ பொன்னம்பலம், திரு. செ. சுந்தரலிங்கம், திரு. பொ. கந்தையா; திரு பொ. நாகலிங்கம்.

திரு. செல்வநாயகம் வரமுடியாதபடியால். தமிழரசுக்கட்சியின் சார்பாக திரு. வன்னியசிங்கம், திரு, அமிர்தலிங்கம், திரு. கந்தையா ஆகியமூவரும் சமுகமாயிருந்தனர்; திரு. அ. வைத்திலிங்கம் பொதுவுடைமைக் கட்சியின் சார்பாகச் சமுகம் கொடுத்தார். மற்றவர்கள் அழைப்பை ஏற்றுச் சமுகம் தந்தனர். இக் கூட்டத்திற்குச் சமுகமாயிருந்தவர்கள் தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள். இந்த நெருக்கடியான காலத்தில் ஒன்று சேர்ந்து எதிர்ப்பியக்கத்தைத் தீவிரமாக நடாத்துவதற்கும், இயக்கம்சம்பந்தமான எல்லாத் தீர்மானங்கள் திட்டங்கள் ஆகிய வற்றிற்குப் பொறுப்பாயிருக்கவும், ஒரு செயற்குழு நிறுவவேண்டும் என்றும் திரு. ச. பேரின்பநாயகனும், திரு. சி.சிவபாதசுந்தரமும், தமிழ்பேசும் பிரதிநிதிகள், மேற் சபை அங்கத்தினர், ஜனநாயக மகாநாட்டுப் (காங்கிரஸ்) பிரதிநிதிகள் ஆகியோரை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# திலகர் தேசவுணர்ச்சி தமிழகத்திலே தேவைப்படுகின்றது

—————0—————

## சுய ஆட்சிச் சுலோகம் மட்டுஞ் சொன்னவர் அல்லர்

——0—0——

உலோகமான்யரின் வாழ்க்கை வரலாற்றை ஆதியோடந்தமாக இப்பொழுது அரசியலில் ஈடுபட்டிருக்கும் அத்தனைபேருக்கும் பாடமாகக் கற்பித்து விட்டால் இந்நாட்டின் விடுதலைக்கும் வழியுண்டாகும் என்று கூறினல் முற்றும் பொருந்தும்.

சிறைசென்ற திலகர் என்றளவில் அத்தீவிர புருடரிம் தியாக சேவையைக் கணித்துவிடலாகாது. நாடுகடத்தப்பட்டார், நாட்டிற்காக மனம் மொழி மெய்யாய் உழைத்தார் என்பதெல்லாம் உண்மையே. ஆனால் அவர் இருந்த காலத்தில் இந்திய நாட்டின் விடுதலை இயக்கம் உருவாகி வளர்வதற்கு இன்னல்கள் இடையூறுகள் எத்தனை தலைகாட்டினவென்றும் இவற்றையெல்லாம் திலகர் எவ்வாறு அகற்றினர் என்றும் அறிதல் அத்தியாவசியம்.

மகாத்மா காந்தி தென் ஆபிரிக்காவிலிருந்து சத்தியாக்கிரகப் பயிற்சி செய்து தாய் நாடு திரும்பியபொழுது பாரதநாட்டின் விடுதலை இயக்கம் பலவேறு தரங்களாய் வெவ்வேறு விதங்களாய் அமைந்திருந்தது என்றால் அக் காலத்திலே அந்நியர் ஆட்சியின் பலம் அவ்வளவாக இருந்ததென்பதும் விடுதலை பூரணமாக வேண்டப்படு முன் ஒரு அளவில் சுயஆட்சிக்குப் பாடுபடுவதே தேசத் தொண்டாகும் என்பதும் இன்னபிறவுமே உண்மை நோக்கங்களாயிருந்தன வென்று புலப்படும். கோகலே அன்னிபெசன்று அம்மையார் இலாலா இலசபத்திராய் திலகர் என்ற இவர்கள் தங்களுக்குள்ளே விடுதலைப் போராட்டத்தின் உடனடியான குறிக்கோள் என்ன என்று குறிப்பதில் ஒற்றுமைப் பாடில்லாதவர்களாய்த் தங்கள் தங்கள் தனிப்பட்ட 'சுய ஆட்சிக் கழகங்களை (Home Rule League) நிறுவி உழைத்து வந்தனர்.

காந்திப்பெரியாரின் சத்தியாக்கிரக மகிமையை யறிந்தபின் அதை ஒரு தேசப் போராட்ட ஆயுதமாகப் பயன்படுத்தத் திலகர் உடம்பாடுடையவரானர் என்பது சுய ஆட்சிப் போராட்டத்தில் அவருக்கிருந்த பேரபிமானத்தைக் காட்டியது.

தொடர்ச்சி 5ம் பக்கம்

### எங்கள் அறிவித்தல்

ஆடி 21உ ஞாயிற்றுக்கிழமை (5-8-56) 22உ திங்கட்கிழமை (6-8-56) மாவிட்டபுரம் தேர் தீர்த்த உற்சவங்கள் நிகழ்தலால் திங்கட்கிழமை 6-8-56 சைவப்பிரகாசயந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் திறக்கப்படமாட்டா என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதிபர்

திருச்சிற்றம்பலம்.

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகிஸூ ஆடி மீ கக உ வெள்ளிக்கிழமை

## வகுப்பு வாத வரவுசெலவுத் திட்டம்

'வந்துவிட்டோம் மக்கள் முன்னேற்றத்துக்கு வாழ்க்கை வழி வகுப்பதற்கு' என்று வாய்ப்பறை சாற்றிக்கொண்டு பாராளுமன்றத்தில் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பண்டாரநாயகக் கட்சியாரின் பெருமை இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தின் அமைப்பிலிருந்து முற்றாய் வெளியாகிவிட்டது.

பருத்தித்துறைத் தொகுதி அங்கத்தவர் திரு. பொ. கந்தையா அவர்கள் வரவு செலவுத் திட்டத்தைக் கண்டித்துப் பாராளுமன்றத்திலே பேசும்போது மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சி ஆட்சியில் என்ன மாற்றம் உண்டானது என்று நேரடியாகக் கேட்டு, வாழ்க்கை வழித் தரத்திலோ அன்றி வேலையில்லாமை நீக்கிய வகையிலோ அல்லாமலும் உற்பத்தி முறையிலோ எங்கே முன்னிருந்த நிலைமை சீர்ப்படுத்தப்பட்டதென்று அந்த வினைவை வியாக்கியானஞ் செய்து புது அரசாங்கத்தின் பெருமை போலியானதென்று தெளிவாகக் காட்டினர். இவ்வளவும் உண்மையென்று நாமும் கூறுகின்றோம்.

முன்னணியார் என்ற உண்மைக்கு முரண்பாடான மகுடத்துடன் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பின்பாவது அப்பெயருக்குத் தக்கவாறு கொள்கைகளையும் செயல்முறைகளையும் ஓரளவுக்கேனும் மாற்றியமைக்காது சனநாயகமென்ற நினைவேயில்லாமல் வகுப்புவாதமே உருவெடுத்தாற் போன்று ஒருபாற் கோடி மறுபாலாரின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி போட உள்ளம் நாணுது உழைக்கின்ற பண்டாரநாயகக்கட்சி இன்னும் எவ்வளவுகாலத்துக்கு ஆட்சி நடத்தப் போகின்றதோ நாமறியோம்.

பொருளாதார விருத்திக்கும் நாட்டின் வாழ்க்கை வளத்துக்கும் உழைக்கின்ற அரசே அரசு. அவ்வாறு செயலாற்றும் பொழுது மொழி மதம் இனம் என்று பாகுபாடில்லாமல் யாவரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அல்லவா வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கும். அந்த வகையிலே இந்த ஆண்டு பாராளுமன்றத்திலே புது நிதி மந்திரியாராற் கொணரப்பெற்ற வரவு செலவுத் திட்டம் முழு மாறாகவிருக்கின்றதென்பதை அத்திட்ட விவாதத்தின்போது சொற்பெருக்கிய எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒவ்வொருவரும் ஆணித்தரமாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

தென் ஆபிரிக்க தேசத்திலே வெள்ளையரல்லாதாருக்கு வேறு ஒழுக்கங்கள் அரசாங்கத்தால் வகுக்கப்படும் விபரீதம் போல இலங்கையிலும் அரசியல், பொருளியல், சமூகவியல், சமயவியல் என்ற எம்முனையிலும் வகுப்புவாதத்தின் விசுவரூபம் தோற்றமளித்துக்கொண்டேயிருக்கிறதை நோக்கும்பொழுது இந்நாட்டிலே சிறுபான்மையினர் இனி மானத்துடன் வாழ்வது முடியாத காரியமாய் விட்டதென்றே சொல்லலாம்.

வாழ்க்கை வளத்தைத் தக்கவாறு அமைப்பதற்கு அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவு அளிக்காதுவிட்டதென்று சொல்லிக்கொண்டு செயலற்று நிற்பது பயனளிக்காது. அரசாங்கத்தின் ஆதரவில்லாமலே பொது மக்கள் பொருளாதார நிலையை ஒழுங்கு செய்வதற்கிடமுண்டு. கூட்டுறவு முயற்சியினால் ஒருங்கு சேர்ந்து உள்ளத் தூய்மையுடன் உழைத்தால் வாழ்க்கை வளத்துக்காகும் முன்னேற்ற வழி காணப்படும். பொருள் நிலைமை போதியதாயிருந்தாலல்லாமல் அரசியலில் உரிமைகளைப் பெறுவதற்கு இயங்குவது முடியாதென்பதை அனைவரும் ஊன்றி நினைத்து ஆயத்தம் ஆகல் வேண்டும்.

# செய்தி தெரியுமா -

சிட்டுக்குருவி ...

### சூவெசு விற் சுழல்காற்று

தளபதி நாசர் மேற்கு நாடுகளை ஒரே கலக்கத்தில் வைத்திருக்கிறார். நைல் நதியில் ஒரு அணைகட்ட அமெரிக்கா உதவி வாக்களித்துப் பின் மறுத்த காரணத்தால் சூவெசுவை எகிப்து நாட்டின பூரண ஆதிக்கத்துக்குட்படுத்தும் பிரகடனத்தைச் செய்திருக்கின்றார் எகிப்திய சனாதிபதி.

இதற்கிடையில் உருசியத் தலைவர்கள் ஓடோடியும் இக்கலகத்தைப் பயன்படுத்த முன்வந்து விட்டனர். எகிப்துக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையேயிளவு பெருத்துவருவது நெய்க்குடம் உடைவதைக் காத்திருக்கும் அரசியற் சுணங்கர்களுக்கு உவப்பாயிருப்பது நூதனமன்று?

### ஆங்கிலேயரின் ஆவேசம்

ஆங்கிலேயர்கள் சும்மா விடுவார்களா? வல்லரசுக் கோலம் வரவரச் சீர்கெட்டாலும் வாய்வீரம் போகவில்லையல்லவா. 'எதிர்த்தே தீருவோம்' என்று இங்கிலாந்திலே ஒரு பரபரப்பு. மேற்கு நாடுகள் அவசர அவசரமாய்க் கூடுகின்றன

### இதற்கிடையில் இஸ்ரவேல் என்ன செய்கின்றது!

எல்லைச்சண்டையென்று இஸ்ரவேலுக்கும் எகிப்துக்கும் இடையே தோற்றம் அளிக்கின்றது. ஆகவே மத்திய கடற்கரைப்பிரதேசம் மறுபடியும் மகாயுத்தத்துக்கு ஆயத்தஞ் செய்கின்றது போலும்.

### நம்பிக்கை இல்லை

இன்றுள்ள இலங்கை அரசாங்கத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை என்னும் பிரேரணை ஒன்றை யாழ்ப்பாணம் நகர சபை நிறைவேற்றியுள்ளது

அரசியல் அலை

# 'சிங்கள மயம்' செல்வனே தெரியவில்லையாம்!

## மேத்தானந்த — பண்டாரநாயக விவாத வேடிக்கை!!

தனிச்சிங்கள மொழித் திட்டத்தைச் சட்டமாக்கிவிட்டதாலே தமிழ் பேசும் மக்கள் தலைவிதியெவ்வாறுனதென்பதை யாரும் நினைப்பாரில்லை. தனிச்சிங்கள மயம் சர்வரப் பரிபூரணமாய்த் தோற்றுது நிற்பதற்குப பிரதமரே காரணராய்விட்டார் என்று சிங்கள வகுப்புவாதிகளுக்குள்ளேயே மனக்கொதிப்பு உண்டாகிவிட்டதென்றுற் காரியம் எவ்வளவு பாரதூரமாய் விட்டதென்பது தெளிவாகின்றது.

மேத்தானந்த மலலசேகர பண்டாரநாயக தகநாயக என்ற இந்தப் பேர்வழிகள் தான் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பொதுத் தேர்தலுக்கு முன் பெரும் பாடுபட்டவர்கள். இப்பொழுது சட்டமும் வந்துவிட்டது. சகல நட்டமும் தமிழ்பேசும் இனத்துக்குச் செய்தாய் விட்டது; இது போதாதாம். போதாதென்று ஒரு வாதம் தொடங்கி விட்டார்ற் போதும் தமிழ் இனம் பயந்து விடும் என்று மேத்தானந்த போன்றவர்கள் எண்ணி விட்டார்கள் போலும்!

சிங்களச் சட்டங் கொண்டு வந்தவர்களில் யார் யார் உண்மையான புத்தர்கள் என்ற ஆராய்ச்சி தொடங்கியிருப்பதைப் பார்த்தால் மொழியிலிருந்து மதத்துக்கு இந்த வகுப்புவாத மர்க்கடம் பாய்ந்து விடும்போலிருக்கின்றது.

இந்தியாவிலே சாதிபற்றிய சில விசேஷ சலுகைகளை அரசாங்கம் செய்திருக்கிறது. இதனால் பாதகம் ஒன்றுமில்லை. ஒருவன் ஒரு சாதியில் பிறந்துவிட்டால் சலுகை பெறுவதன் பொருட்டு அவன் இன்னொரு சாதியில் புகுதல் முடியாது. ஆனால் ஒரு சமயத்தில் பிறந்தவன் சலுகையின் பொருட்டு எத்தனை சமயத்திலும் மாறி மாறிப் புக முடியும். ஆதலால் சமயச் சலுகை மிகவும் ஆபத்தானது. எனவே இலங்கை வித்தியா பகுதியார் கடைப்பிடிக்கும் சமயச் சலுகையை விரைவில் வேரறுத்து வீழ்த்தவேண்டும். இல்லையேல் அரசாங்கமே சமய மாற்றத்துக்கு ஆதரவளிக்கும் பெருங் குற்றமுடையதாகும்.

### முனியப்பசுவாமிகோவில் திருப்பணி

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்ப சுவாமி கோயில் திருத்தவேலை ஆடி 3-ந் திகதி புதன்கிழமை (18-7-56) ஆரம்பமாகியிருக்கின்றதென்றும், அன்று தொடக்கம் பொங்கல் முதலிய வழிபாடுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றும் அறியத்தந்து இத்திருப்பணிக்குப் பொருள் உதவ விரும்புவோர் வேறு யாரிடமும் கொடாது, தமக்கு நேரிலோ தபால்மூலமாயோ அனுப்பிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி கோயில் பரிபாலகர், "யாழ்ப்பாணம் 236,3 ஆசுப்பத்திரிவீதி" ஸ்ரீ க ஜெ இராசசிங்கம் கேட்டுக் கொள்ளுகின்றார்

—:—

### நேயர்கள் நெஞ்சம்

# சைவப் பெருமக்களுக்கு வேண்டுகோள்

நமது சைவ ஹரிசன மாணவர்கள் பலர் இப்போது சில வருடங்களாகக் கிறிஸ்தவர்களாகி வருகிறார்கள். இந்தச் சமய மாற்றத்துக்கு அரசாங்கம் நடத்தும் பரீசைதன் காரணம் என்பதை அறியும்போது எந்த ஒரு சைவனும் கவலைப்படாமல் இருக்கமாட்டான். கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் சைவ மாணவர்களும் சேர்ந்து படித்தற்குப் பல காலங்களாக வசதி இருந்துவந்தது. சுமார் 8 - 9 வருஷங்களாய் கிறிஸ்தவர்களே கிறிஸ்தவக்கல்லூரியிற் சேரவேண்டும் என்ற விதி உண்டாயிற்று. இவ்விதி வந்தபின் சைவமாணவர்பலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி ஆசிரியர்களாகி விட்டனர். அரசாங்கப் போட்டிப் பரீட்சைகளில் கூடிய புள்ளி பெற்ற மாணவர்களைத் தெரிந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் எல்லாவற்றுக்கும் அரசாங்கமே பகிர்ந்து கொடுத்தால் இந்த மத மாற்றத்துக்கு இடமேயிருக்காது. ஆனால் கிறிஸ்தவக் கல்லூரிகளில் கிறிஸ்தவ மாணவர்களே சேரவேண்டும் என்ற விதி இருப்பதனாலே போட்டிப் பரீட்சைகளில் புள்ளி குறைவாய் எடுத்த மாணவர்களும் கிறிஸ்தவர் என்ற காரணத்தைக்கொண்டு சலுகையான குறைந்த புள்ளிபெற்று இலகுவில் சித்தி யடைந்து கிறிஸ்தவ ஆசிரியர்களாகிவிட்டனர்.

கடந்த 8 வருட காலத்தில் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களுள் 80 வீதமானவர்கள் பரீட்சைகளில் தோற்றும் அதே நேரத்தில் கிறிஸ்தவரான சைவர்களே இவர்களுள் 60 வீதமானவர்கள் சைவ ஹரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பது கூர்ந்து கவனிக்கத்தக்க தொன்றாகும். இந்த அநியாயத்துக்குத் தடை விதிக்க வேண்டியது தங்களது பெருங் கடமையாகும்.

ஆலயப் பிரவேச உரிமை அளித்தாலும் இந்தப் பரீட்சைமுறை இருக்கும் வரையில் நமது ஹரிசன வகுப்பு மாணவர்கள் சமயம் மாறுவதைத் தடைசெய்யமுடியாது. ஆதலால் வித்தியா பகுதியார் நடத்தும் பிரவேசப் பரீட்சையில் புள்ளிபெற்ற கிரமப்படியே மாணவர்களைத் தெரியும் வழக்கத்தை விரைவில் கையாளச் செய்ய வேண்டும். இதுபற்றி இன்னும் பல உண்டு தாங்கள் அழைத்தால் சந்திக்கவும் வருவேன். வணக்கம்!

மு. செல்லையா ஆசிரியர்
பொன்மகள் வாசம்,
அல்வாய்.

### தமிழ்க்கல்விபற்றிப்பேருரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் வடமாகாண ஆசிரிய சங்கங்களின் ஆதரவில் சனிக்கிழமை 4-8-56 மாலை 6 மணிக்கு, வண. கலாநிதி எக்ஸ். எஸ். தனிநாயக சுவாமி அவர்கள் "தமிழ் மொழிக் கல்வியின் வருங்கால நிலை" என்னும் பொருள்பற்றிப் பேருரை ஒன்று நிகழ்த்துவார்கள் என அறியவருகின்றது.

# தெய்வீகவாழ்வுக்குவழி

## தமிழ்இலக்கியப் பயிற்சியின்பயன்

(முற்றொடர்)

அம்மகோவெனும் விழும் அழும் எழுந்துநின்
றருவி நீர்விழி சோரும்
விம்மு மேங்குமெய் வெயர்த்து
வெய்துயிர்க்குமென் மெல்லியளி வட்கம்ம
வம்மின் மாதரா மதுரையும் குமரியும்
மணந்தவர் வலர்த் தாமம்
தம்மினோ வெனுந் தவப்பயன் பெரிதேனும்
தந்தை தாளெறிந் தோர்க்கே"

சோமசுந்தரக் கடவுள் "பொன்பூத்தலர்ந்த கொன்றையிர் பூப்பக் கருஞ்சினைவேம்பு பொன்முடி சூடியண்ணலானேறு மண்ணுண்டு கிடப்ப கண்போற் பிறழும் கெண்டைவலனுயர்த்து வரியுடற்கட் செவி பெருமூச்செறியப் பொன்புனைந்தியன்ற பைம்பூடாங்கி" மதுரைவீற்றிருந்து பாண்டியகுல மன்னனாகி அரசாண்ட காலமும் ஒன்றிருந்தது. சிவபெருமானும் வீரசுந்தரபாண்டியன் வீதியில் பவனிவரும்போது ஒரு பெண் அவரின் அழகைக்கண்டு மயங்கி விழுகிறாள். ஆகையால் மன்மதன் வில்லாகிய கரும்பு அவளுக்குக் கைக்கிறது. அழகிய புயத்தில் தரித்திருக்கின்ற வேப்பம்பூவானது கனிந்த இனிப்புள்ள கரும்புபோன்றது என்று இனிப்பைக் கைப்பாகவும் கைப்பை இனிப்பாகவும் மாறிக்கூறுகிறாள். இதைப் பாங்கி பார்க்கிறாள். அவளுக்கு ஒரு சந்தேகம் உதிக்கிறது. அதைத் தலைவரிடமே கேட்டுவிடுகிறாள். "நீரோ காலை மாறித் திருநடனம் செய்கிறீர்" இங்கே உம்மில் காதலுடைய தலைவியோ மாறி வார்த்தையாடுகிறாள். ஆகையால் 'மாறியாடுநின் வல்லபந்தொழ வந்தபேர்க்கும் வருவகொலோ" என்று கேட்டுவிடுகிறாள்.

களி என்பது கட்குடியர் கள்ளைச் சிறப்பித்துக்கூறுவதாகப் பாடப்படுவது. ஆனால் அவர்கள் வெறியிலும் இறைவனை மறக்க மாட்டார்கள். "அழகுற்றதோர் மதுரேசனை அமரேசனெனக்கொண்டு" இசைபாடும் குடியர் தாங்கள் என முகவுரை கொடுத்து தங்களை அறிமுகம் செய்துகொள்கிறார்கள். அவர்கள் வேளைக்கு இரண்டு கலம் ஊறும் பனையை தட்சணாமூர்த்திக்கு இணையாகச் சொல்லலாம் என்று கருதுகிறார்கள். பழுதில்லாத சான்றாண்மையுடையவர்கள் தினம் வழிபாடு வந்தனைகள் செய்து முயற்சித்தால் நல்ல பலன் கிடைக்கும். "கலைநூல் எழுதப்படும்ஏடுண்டு' குருமூர்த்தியினிடத்தே பல அறிவுகள் எழுதப்பெற்ற ஏடுகள் உண்டு. பனையிடத்தே ஏடுகள் உண்டென்பது யாவருக்கும் தெரிந்த உண்மை. "அது விடும் ஓலையால் வீடு வேயலாம். அறிவுச் சுவடிகள் மோட்சமாகிய வீட்டைத் தரும் வேதங்களை எழுதாமறை என்று கூறுவார்கள். இவற்றை நன்றாக அறிந்து பிறர்க்கும் உபதேசித்து குருநாதனாக வணங்கப்பெறுவார் முருகப்பெருமான். அவர் தட்சணாமூர்த்தியின் இளையகுமாரன். முருகப்பெருமானை "இளம்பாளை" என்று குறிப்பிடுகிறார் நூலாசிரியர். "எழுதாததோர் திருமந்திரம் இளம்பாளையிலுண்டோ என்று

ஸ்ரீ வ. குகசர்மா

ஆசிரியர்முடிக்கிறார். இளம்பாளையில் கள்ளு உண்டு என்பதுயாவருக்கும் விளங்கக்கூடியபொருள்.

கூடவிழைத்தல் இந்நூலிற் கூறப்படும் மற்றோர் துறை. தலைவனைப் பிரிந்த தலைவி தன்னை அவன் மீண்டு வந்து சேருவானோ எனக் குறி பார்ப்பதாகக் கூறப்படுவது. கண்களை மூடிக்கொண்டு வட்டமாகக் கீறுவார்கள். இரு அந்தமும் ஒன்றாகச் சேர்ந்து வட்டமாகச் சேர்ந்தால் தலைவன் தலைவியைச் சேருவான். கூடற்பதியிலே ஒருபெண் சோமசுந்தரப்பெருமானோடு கூடுதலை விரும்பி கூடல் இழைக்கிறாள். அது பிழைத்து விடுகின்றது. அவள் வருந்துகிறாள். "தழைத்துடன் கூசலார் குழைத்துடன் கூடலார், பிழைத்திடும் கூடலே இழைத்திடுங் கடலே" என்ற செய்யுள் அவளின் வருத்தத்தைக் காட்டுகிறது. சிவபெருமான் ஒருமுறை ஒரு திருவிளையாடல் செய்தார். தம்மை வணங்கிய சுந்தரமூர்த்திநாயனார்தமது மனைவியாகிய பரவையாருக்குக் கொடுக்கப் பொருள் வேண்டி இறைவனைப் பாடினார். அதற்கு இறைவன் மகிழ்வு கொண்டு பரவையாருக்குக் கொடுக்கும்படி பன்னீராயிரம் பொன்னைக் கொடுத்தருளினார். அப்பொன்னைத் திருமுதுகுன்றத்திலே மணிமுத்தாநதியிலே இட்டார். பின்பு சிவபெருமான் அருளாலே திருவாரூர்க் குளத்திலே எடுத்தார். வலைவன் பரத்தையர்வீட்டிலேயிருக்கிறான். அவனுக்கு பரத்தையர் இடத்திலே வெறுப்பு வந்துவிட்டது. தலைவியிடம் போனால் ஏற்றுக் கொள்வாளோ இல்லையோ என்ற பயம். பாணனைத் தூது அனுப்புகிறான். பாணன் தலைவியிடம் போய் தலைவன் எங்கே என்று கேட்கிறான். தலைவிக்கு விளங்கிவிட்டது பாணனின் நோக்கம். சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பதி மதுரை. பொன்னை ஆற்றிலே இட்டு குளத்திலே தேடச் செய்தல் அவரின் குணம். அதுபோலல்லவா பாணனும் செய்கிறான். தலைவி கேட்கிறாள்.

"கொங்குரையாற்றி விட்டுக் குளத்தினிற்றேட நீடு, மங்குல்தோய் முதுகுன்றையர் மதுரையோ மதியில் பாணா, வெங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்த்தி". என்று கேட்கிறாள். இது பாணனை வெகுளல் என்னும் துறை.

இந்நூலில் குறம், மறம், கொற்றியார், பிச்சியார்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### சைவம் வளர்த்த

# திரு. சிவபாதசுந்தரனார்

தமிழ்நாடு செய்த அருந்தவப் பெருய்த் தோன்றிய பெருமக்களுள் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரனாரும் ஒருவராவர். இவருடைய மாட்சிமை மிக்க தந்தையார் ஆசிரியர் வ. சுப்பிரமணியம்பிள்ளை ஆவர். தாயார் வள்ளியம்மையார். இவ்விருவருக்கும் மூன்று புதல்வியர்கள் பிறந்தனர். அதன்பின்னால் பலவருடம் புத்திரப்பேறில்லாமல் ஒரு சற்புத்திரரைப் பெறுவதற்கு தீர்த்த தல யாத்திரைகள் செய்தனர். கந்தசஷ்டி விரதமும் காத்தனர். அதுவுமன்றித் தங்கள் ஊராகிய புலோலியில் தொல்மருதின் கீழுறையும் புங்கவனாகிய ஞானவைரவப் பெருமானையும் அல்லும் பகலும் தொழுது வருவாராயினர்.

செ. கோவிந்தசாமி அவர்கள்

இங்ஙனம் வழிபாடாற்றி வருங்காலத்தில் சிவஞான வைரவமூர்த்தி சொப்பனத்திலே தோன்றிச் சிறிது காலத்தில் நீங்கள் வேண்டியபடி ஒரு புதல்வரைத் தந்தோம் என அவ்விரு முதுகுரவர்க்கும் அருளிச் செய்தார். அதன் பின்னால் வள்ளியம்மையார் கருவுற்றுப் பெற்ற அம்மகவிற்கு சிவபாதசுந்தரம் என நாமகரணம் செய்தனர். உரிய காலத்தில் அவருக்கு வித்தியாரம்பஞ் செய்வித்துத் தமதுஊரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானால் தாபிக்கப்பட்ட சைவப்பிரகாசவித்தியாசாலைக்குக் கல்விகற்கும்படி அனுப்பினர். பின்பு சமய விசேடதீட்சைகளும் பெற்றுக் கொண்டனர். பாடசாலைப் படிப்பு ஒழிந்த நேரமெல்லாம் தம் பொழுது போக்கை இறைவழிபாட்டிலேயே கழிப்பாராம்.

காலை மாலை நேரங்களில் எல்லாம் மருதடி ஞானவயி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# முயற்சி திருவினையாயிற்று

## தாழ்த்தப்பட்டவர் உயர்ந்த சரிதை

(வித்துவான் து. கண்ணப்மாள், பாத்திமா கல்லூரி, மதுரை "செந்தமிழ்" மாசித்திங்கள் இதழில் எழுதியது)

உலகமக்கள் தொகையை நோக்குமிடத்து அவருள் முயற்சியால் உயர்ச்சிபெற்றபெருமக்கள் சிலராவர். அவருள்ளும் தாழ்த்தப்பட்ட இனத்தையோ, அடிமைப்பட்ட இனத்தையோ சேர்ந்தவர் மிகச் சிலரே யாவர். அம் மிகச் சிலருள் ஒருவரே ஜியார்ஜ் வாஷிங்குடன் கார்வர் என்பவர்.

### இளமைப் பருவம்:—

கார்வர் நீகிரோ இனத்தவர்; அடிமைப் பெண்ணுக்குப் பிறந்தவர், மிஸௌரி மாகாணத்தில் வாழ்ந்த மோசஸ் கார்வர் என்னும் அமெரிக்கரால் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் பேரன்புடன் வளர்க்கப்பட்டவர். அவர் இளமையில் பலவகைச் செடிகளையும் மரங்களையும் கூர்ந்து கவனித்து, அவற்றின் வளர்ச்சியை ஆராய்ந்து வந்தார். பலவகை மலர்ச்செடிகளைப் பல இடங்களிற் பயிரிட்டுப் பழகினார்; பல்வகை எருவகைகளை ஆராய்ந்து, அவற்றைச் செடிகட்குப் பயன்படுத்தினார்.

### கல்விப் பயிற்சி:—

கார்வர் பத்துவயதிற்குப் பின்பே பள்ளியில் சேர விழைந்தார். ஆயின் அவர் நீகிரோவர் என்ற ஒரே காரணத்தால் பள்ளியில் சேர்க்கப்பட்டிலர். எனினும், கற்பதில் பேரார்வம் கொண்ட அவர், ஆசிரியர் வகுப்பிற் கற்பித்தவற்றைப் பள்ளியின் வாயிலில் இருந்தபடியே நாள்தோறும்கேட்டு அறிவைப் பெற்றார்; பின்பு எவ்வாறேனும் ஒருபள்ளியிற்சேர்ந்துபயில உறுதி கொண்டு, தமது வளர்ப்புப் பெற்றோரிடம் விடைபெற்று, நியோஷா என்னும் நகரம் சென்றார்; அங்கிருந்த பள்ளியில் சேர்ந்து பயின்றார்; மூன்றாண்டுகட்குப் பின்னர் கான்ஸாஸ் நகரத்தில் இருந்த பெரிய பள்ளியிற் சேர்ந்து சில ஆண்டுகள் கல்வி கற்றார்.

### கல்லூரிக் கல்வி

உயர் நிலைப் பள்ளிப்படிப்பை முடித்த கார்வர் தமது இருபத்து நான்காம் வயதில் ஆம்ஸ் நகரத்தில் இருந்த அயோவா கல்லூரியில்சேர்ந்தார்; தம் உழைப்பாலும் பணிவாலும் இன்சொல்லாலும் அனைவர் உள்ளங்களையும்கவர்ந்தார்; கல்லூரியில் நடைபெற்ற கட்டாய இராணுவப் பயிற்சியில் முதலிடம் பெற்றார்; அதனால் கல்லூரி இராணுவப் பயிற்சிப் படையின் தலைவராகப் பல்லோர் பாராட்டுதலை உற்றார்; பொருள் முட்டுப்பாடு நேர்ந்த சமயங்களில் பல இடங்களிற் பணியாற்றிப் பொருளீட்டினார்; வீட்டைத் தூய்மை செய்வது முதல் மடைத் தொழில் ஈறாகப் பலதொழில்களையும் செய்து பாராட்டும் பணமும் பெற்றார். இவ்வாறு அவர் ஒருபால் தம் வறுமையைப் போக்கவும் மறுபால் கல்வி கற்கவும் பெரும்பாடு பட்டார்; தம் இனத்தவரை உயர்த்தவே தாம் கற்று அறிஞராகவேண்டுமென்று அவாவினார். அவர் மாணவராக இருந்தபோது சிறந்த ஓவியராகவும் திகழ்ந்தார். சிகாகோவில் நடைபெற்ற பொருட்காட்சியில் அவரது ஓவியம்அறிஞரால் பாராட்டப்பட்டது.

அவர் இளமை முதல் ஊக்கம் காட்டிவந்த தாவர ஆராய்ச்சியே அவரது விருப்ப பாடமாக அமைந்தது. அவர் பலவாறு ஆராய்ச்சி செய்து, "மாற்றப்பட்ட தாவரங்கள்" என்பதுபற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வரைந்து பி. எஸ்ஸி பட்டம் பெற்றார்; பின்பு தாவர ஆராய்ச்சியை மேலும் தொடர்ந்து செய்து, தாவரங்களின் சிறப்புக் குறித்துச் சில உண்மைகளை வெளியிட்டார். அவருடைய ஆராய்சி முடிவுகளை ஏற்ற அறிஞர்கள் அவருக்கு எம். எஸ்ஸி பட்டத்தை வழங்கினர்.

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# முயற்சி திருவினையாயிற்று

[-3ம் பக்கத் தொடர்ச்சி]

**போரசிரியர் பதவி**

எம். எஸ்ஸி பட்டம் பெற்ற கார்வர் தாம்படித்த கல்லூரியிலே உதவிஆசிரியராகப் பணியாற்றினூர். அக் காலத்தில் அமெரிக்காவில் டஸ்கிகி என்னும் இடத்தில் புக்கர் வாஷிங்டன் என்னும் நீகிரோ அறிஞர் தம் இனத்தவர்க்கெனக் கல்லூரி ஒன்றைத் துவக்கினர்; அக் கல்லூரியிற் பயிர்த்தொழிற் கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் பதவியை நமது கார்வரை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். தாழ்ந்து கிடந்த தமது இனத்தவரை உயர்த்துவதையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட கார்வர், புக்கரதுவேண்டுகோளுக்கு இசைந்து, அவரது கல்லூரியில் விஞ்ஞானப் பேராசிரியர் பதவியை ஏற்ருர்.

**மாணவர் இழைத்த சோதனைகள்:**

வறுமையின் பிரதிநிதியாக விளங்கிய கார்வரது மெலிந்த தோற்றத்தைக் கண்ட மாணவர் அவரது திறமையில் ஐயங்கொண்டனர்; 'உருவு கண்டெள்ளாமைவேண்டும்' என்பதை மாணவர் எங்ஙனம் அறிவர்? தாவரக்கலையில் அவர் பண்பட்ட அறிவினரா என்பதை அறிய விரும்பினர். ஒருநாள் அவர் பிற ஆசிரியர்களுடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் மாணவர் பலவகைச் செடிகளுடனும் கொடிகளுடனும் அவரிடம் சென்றனர். மாணவன் ஒருவன் ஒரு செடியைக் காட்டி அதன் பெயரைக்கூறுமாறுவேண்டினன். கார்வர் அதன் பெயரைக் கூறியதோடு அமையாது, அதன் பயன்களையும் விளங்க உரைத்தார். பின்னர் ஒவ்வொரு மாணவரும் ஒரு செடியையோ, கொடியையோ காட்டி அதைப்பற்றிய விவரங்களைக் கேட்டனர். இளமை முதலே செடிகொடிகளுடன் பழகிப்பேரறிவு பெற்றிருந்த கார்வர் மிக்க பொறுமையுடன் பல விவரங்களைக் கூறி மாணவர்களை மனமகிழச் செய்தார்.

(வளரும்)


# யாழ்ப்பாணம் ஐக்கியஸ்ரீபத்தி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 11433

அம்பலவாணர் சம்பண்டனும் பெண் சரஸ்வதி —வண் கிழக்கு வழக்காளிகள்

எதிர்

1. முசையன் நல்லையாவும் பெண்
2. செல்லமும் -- வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம், எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 11433ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஹூ புரட்டாதி மீ 22 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாட்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கில் முல்லைகட்டையடி என்னும் காணி ங். இ 10 வான்பயிர் செய்பயிர்களும், கிணற்றுப் பங்கும்.

எல்லை கிழக்கு கைஒழுங்கை.
வடக்கு அய்யன் நாகமுத்தனின் ஆதனம் பங்காளரும்.
மேற்கு ஒழுங்கை.
தெற்கு செல்லத்துரை பெண் வள்ளியாச்சியின் ஆதனம்,
இதில் சொரியலாக ங். இ. 3.

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
30-7 56.
M 346 3 8 (து 100)

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

# இனி ஏன் சட்டம்?

யாழ்ப்பாணத்திலுள்ள, மிகப் புராதனமான நல்லூர்க் கந்தசுவாமிகோயில், வண்ணை வைத்தீசுவரன் கோயில், பெருமாள் கோயில், சுதுமலை அம்மன் கோயில், கொழும்பிலுள்ள சைவக் கோயில்கள், மட்டக்களப்பிலுள்ள கோயில்கள், திரிகோணமலையில் 12 கோயில்கள் ஆகிய எல்லாக் கோயில்களின் தர்மகர்த்தாக்களும், நல்லெண்ணமுள்ள சைவ நன்மக்களும், தாழ்த்தப்பட்டவகுப்பினர்க்கு, மனம் வாக்குக்காயம் ஒருமித்து அவற்றைத் திறந்துவிட்ட பின்னர் சிங்கள அரசாங்கத்தில், சைவ அரசியல்தலைவர்கள், எதற்காகச் சட்டம் ஏற்படுத்துவது? தமிழ்ப் பிரதிநிதிகள் மாத்திரம் சட்டம் இயற்ற முடியுமா? சிங்களப்பிரதிநிதிகள் அதிகப்பட்ட பாராளுமன்றத்தில், அவர்களின் அதிக வாக்கைக்கொண்டுதான் சட்டம் உண்டாக்க வேண்டும். சைவக்கோயில்களில்; பக்தர்கள் பக்தியாய்ப் பாடவேண்டிய பக்திரசப் பாக்களாகிய, தேவார திருவாசகங்களை உண்டாக்கிய தமிழ்த் தாயை இலங்கையில் இல்லாதொழித்த, சிங்களப் பிரதிநிதிகளிடம் பிச்சைவாங்கி, தமிழ்ப் பிரதிநிதிகள் முடிந்த காரியத்திற்குச் சட்டம் ஏற்படுத்துவது கனியிருப்பக் காய்கவருவது போலாகும். அது மாத்திரமல்லாமல், பௌத்த அரசாங்கத்தில் எங்கள் சைவசமய விஷயங்களைப் புகுத்திவிட்டால், ஒருகாலப் சைவசமயம் இல்லாதொழியும். செய்ய வேண்டிய உயிர்நிலை சம்பந்தமான காரியங்களைச் செய்யாது, தமிழ்ப் பிரதிநிதிகள் சனநாயக அடிப்படைக்கொள்கை இல்லாத இலங்கைப் பாராளுமன்றத்தில் இன்னமும் ஒட்டிக்கொண்டிருப்பது ஏனோ? தீர்க்கதரிசிகளாயுள்ள அரசியல்ஞானம் படைத்த தமிழ்த் தலைவர்கள இல்லாததினாலன்றோ, இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நிலை இப்படிக கேவலமாய் வந்தது. நேற்றுத் தமிழுக்குச் சமஅந்தஸ்து இல்லை என்று புறக்கணித்துத் தள்ளிய சிங்களத் தலைவர்களை, அதைத்தான் இல்லையென்றாலும், இதற்கு உதவிசெய்யுங்களென்று கேட்கின்றனரே. சோல்பெரித் திட்டம் இலங்கைக்கு வந்தபோது, எங்கள் தமிழ்த் தலைவர்கள், ஆக்க வேலை செய்திருந்தால், தமிழ்ப்பேசும் மக்களின் இன்றையநிலை வந்திருக்குமா? வந்திராதே. இந்த நிலை கண்டும், இன்னும் தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்படவில்லையே. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் "ஆலயப் பிரவேசம்" செய்ய உடன்பட்ட தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாக்கள் இனிமேல் மறுப்பார்களா? ஒருபோதும் மறுக்கமாட்டார்கள். திறக்கப்பட்ட கோயில்களைப் பார்த்து, இனித் திறக்கப்பட வேண்டிய கோயில்களும், இயற்கையாய் திறபடும. இதற்குச் சட்டம் இனிமேல் எதற்கு?

நா. சேனாதிராசா
யாழ். சை. சி. ச. தலைவர்
சுழிபுரம்
22-7-56

## சைவம் வளர்த்த திரு. சிவபாதசுந்தரனுர்

3-ம் பக்கத்தொடர்ச்சி

-வப் பெருமானை வழிபடுவார்கள். மணித்தியாலக் கணக்காய் தியானத்திலும் ஆழ்ந்திருப்பார். தியானம் தலைந்ததும் வைரவக் கடவுள்மேல் இயற்றிப் பல பாட்டுக்களைப் பாடி மகிழ்ந்ததாகவும் இதனை நேரிற் கண்ட முதியோர்கள் இன்றுங் கூறுகின்றனர் அச்செய்யுட்களில் ஒன்றும் அகப்பட்டிலது, கல்லாமற் பாதிகுலவித்தைபாதிஎன்ற பழமொழிக் கிணங்கச் சிவபாத சுந்தரனுர் கற்றும் பாதி கல்லாமலும் பாதியாய்ப் பாலிய வயதில் புலமைபெற்றுத் திகழ்ந்தனர். இத்தகைய புலமை இவர் ஈருகர் ம. வே. மகாலிங்கசிவம் அவர்களிடத்தும் இருந்ததாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் ஒரு கட்டுரையில் எழுதி விளக்கியுள்ளார்கள். சிவபாதசுந்தரர் இளமையிலேயே சித்தவலி படைத்தவர்கள். பன்னிரண்டு வயசுக்குப் பின்னுல் அவர் இறைவனிடம் ஒரு பொருளையும் விரும்பிக் கேட்பதில்லை. அவர் சைவ உலகிற்குத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்து சைவ சமயத்தைக் காத்துவந்தார்.

## ஸ்ரீ சிவபாதசுந்தரனுர் ஞாபக தினம்

ஸ்ரீ சிவபாதசுந்தரம் அவர்களின் ஞாபகதினம் ஆடி மாதம் 26-ந் திகதி (10-8-56) வெள்ளிக்கிழமை காலை திருக்கேதீஸ்வரக் கோயிலில் விசேட தீபாராதனை பூசைகளுடன் நடைபெறுமென அறியவருகின்றது.

## தெய்வீக வாழ்வுக்கு வழி

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

முதலிய பல சிறந்த துறைகள் அமைந்திருக்கின்றன. அவைகளெல்லாம் படிக்கப்படிக்க நனி இன்பம் பயப்பன. மடக்கு என்ற அணியில் பாடப்பெற்றிருக்கும் பாடல்கள் சிலேடைநயம், ஓசைநயம் மலிந்தனவாகவுள்ளன.

"குறுமுகை வெண் தளவளவின் மணந்துவக்கும் காலம் கொழுநரொடு இளமகளிர் மணந்துவக்கும் காலம், மறுகுதொறு நின்றெமர்கள் உருத்திகழும் காலம் வரிசிலைகொண் டுருவிலியும் உருத்திகழும் காலம்"

என்ற செய்யுளடிகள் மடக்குக்கு ஓர் சிறந்தஉதாரணமாகும்.

தமிழ் என்றால் இன்பம். அது தமிழ் இலக்கியங்களிலே படிந்து ஒன்றி விடுதலாலே வருவது. சிறந்த இலக்கியப் பயிற்சியே மேலும் இலக்கியத்தைஆக்குதற்கும் நல்வாழ்வுக்கும் உதவுவது. தெய்வீக வாழ்வுக்கு வழிகாட்டுவதாலே தெய்வத் தமிழ் எனவும் போற்றப்படுவது. எவ்வாறான வாழ்க்கை வழிகளை எவர் வகுத்துக் கொண்டாலும் இவ்வாறான நூல்களில் எவருக்கும் பயிற்சி இருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைதிவு வடக்கு
1. பொன்னம்பலம் செல்லப்பாவும்
2. செல்லப்பா இராசரெத்தினமும்
வழக்காளிகள்

இல. 11716

எதிராக

கள்ளியங்காடு நல்லூர்
1 வையிதநிலிங்கம் சுப்பிறமணியமும்
2. மனைவி ஜெகசோதியும்
3. V. தம்பிராசாவும்
4. மனைவி அன்னபூரணமும்
5. S. V. செல்வதுரை
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11716ம் இலகக வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹூ புரட்டாதிமீ 29 உ சனிககிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை அம்மையார்வளவும் அறுமரா வளவும் நி பர. 3 மூன்று, குளி 3 1/6 மூன்றுடனறிலொன்றும் வான்பயிர் செய்பயிர்களும் விடுகளும் கிணறும் கக்கூசும் எல்லை கிழக்கு வயிரமுத்து கந்தையா மகள லீலாவதியினுதனமும் சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலாதனமும் வடககு வைரமுத்து கந்தையா மகள் லீலாவதியினுதனம் மேற்கு றேட்டு தெற்கு கலகரத்தினத்தின காலம் சென்ற டெண் நல்லநாயகத்தினுரிமைக்காரருதனம். இதடங்கலும்.

இதைப்பற்றி ஏதாகுதல் வேறு விபரம் அறிய விருப்பினுல் கனப்தங்கிய பிறக்டர் வண்ணார்பண்ணை கிழககு க. செ. சோமசேகரமவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51, 4ம் குறக்குத் தெரு
யாழ்ப்பாணம்
M. 343, 3 8 56, (து 300,




# ஸ்ரீ சிவபாதசுந்தரம்பிள்ளை திருநாள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி நமது நாட்டில் சைவத்தொண்டு தமிழ்மொழித் தொண்டும் புரிந்து சிவபதமடைந்த

**சைவப்பெரியார் திரு சு. சிவபாதசுந்தரம்பிள்ளை**

அவர்களுடைய திருநாள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைஆதரவில் இம்மாதம் உகூ உ

(**10-8-56**) வெள்ளிக்கிழமையன்று

ஷை சபை நாவலர் மண்டபத்தில் கீழே காணப்படும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

**தலைவர் : பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்**

இரவு 6-30 — 7 கடவுளாராதனை.

„ 7 — 7-30 தமிழ்மறை யோதல்

திரு. மு. சுப்பையாதேசிகர்

„ 7-30 — தலைவர் முன்னுரை

**ஸ்ரீ சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களைப்பற்றிய விரிவுரைகள் :**

திரு. செ. சின்னத்துரை அவர்கள் B. A.
தெல்லிப்பழை மகாஜன இந்துக்கல்லூரி

திரு. வே. நடராசா அவர்கள் B. A.
கந்தவனம்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 1-8-56.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

M 345 3-8-56. (து. 150)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில்
1. கரம்பன் ஊர்காவற்றுறை N. இரத்தினசபாபதியும்
2. ஷையூர் பெண் யோகம்மாவும் வழக்காளிகள்

எதிராக

இல. MB / 602

நாரந்தனை ஊர்காவற்றுறை கிறிஸ்தோப்பிள்ளை பேதுறுப்பிள்ளை — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/602ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ம் ஹூ ஆவணி மீ 18ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா: 975/—ம் ரூபா: 500/—க்கு 27-10-55 தொடக்கம் 23-2-56 வரை 12 விதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும இறுக்கும்வரை 5 விதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 156-52 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று நாரந்தனையிறை "ஏற்றுமண் குளத்துக்கு தெற்குக் கலடு" பரகெ இல பத்து (10) குளி பத்து (10) இதில் கிழக்குப் பக்கமாய் அரைவாசி பரகெ இல ஐந்து (5) குளி ஐந்து (5) எல்லை கிழக்கு

## கரவெட்டி தச்சந்தோப்பு விநாயகர் ஆலயம்

நிகழும் துர்முகி ஹூ ஆடி மீ 12ந் உ (27-7-56) வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் ஷை ஆலய மகாசபை திரு ஆறுமுகம் சபாபதிப்பிள்ளையின் தலைமையில் கூடி நிர்வாகசபை தாபிசர் சபை. அங்கத்தவர்களையும் உத்தியோகத்தர்களையும் தெரிவு செய்தது.

உத்தியோகத்தர்

ஆ. க. சின்னத்தம்பி 1-ம் மானேசர், க. சின்னையா 2-ம் மானேசர், தா. ஆழ்வாப்பிள்ளை தலைவர், வே சதாசிவம் உப தலைவர் சி. ஆறுமுகம், காரியதரிசி, வை. கந்தவனம் தனாதிகாரி வி. கனகசபை கணக்குப்பரிசோதகர்.

இங்ஙனம்,
சி. ஆறுமுகம்
காரியதரிசி

M 348, 3-8-

ஒழுங்கை வடக்குரோட்டு மேற்கு கிறிஸ்தோபிள்ளை பென்சமின் சின்னத்துரைக்குரிய வாதனம். தெற்கு தர்பையா அரசரெத்தினத்திற்கும் சகோதரசகோதரிகட்குமுரியவாதனம் இடங்கலும்.

1956-ம் ஹூ ஆடி மீ 3உ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M 347 3-8 (து 270)

## பாலர்கள் பாற்காவடிப் பிரார்த்தனை

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கார்த்திகைத் திருவிழா அன்று புதன்கிழமை காலை பன்னிரண்டு வயசுக்குட்பட்ட பாலகர்கள் பன்னிருவர், ஏழாலைச் சைவமடாலயத்திலிருந்து, மேளவாத்தியத்துடனும், பக்திப்பாடல்களுடனும் நடந்து நடந்து நண்பகல் செய்து த்து மணியளவில் கோயில் சந்நிதானத்தை அடைந்து தரிசனம் செய்தனர். பாலர்கள் உள்ளத்தில் முருகப்பெருமானது அருள்நெறி உணர்ச்சியை ஊட்டும் பொருட்டு அகில இலங்கைச் சிவனடியார் சங்கம் இதை ஒழுங்கு செய்துளது.

## திருக்கோணமலைக்குச் செல்லலாமாம்!

சமஷ்டிக் கட்சியினர் திருக்கோணமலைக்குச் சென்று மகாநாடு நடத்துவதை ஆட்சேபித்த பிரதமர் இப்பொழுது அத்தடையை நீக்கிவிட்டிருக்கிறார். அமைதியான முறையில் இந்நிகழ்ச்சி நடைபெறும் என்று கட்சித் தலைவர் உறுதி கூறியிருக்கின்றபடியால் தடைவிதிப்பது தகாதென்பது பிரதமர் தரும் விளக்கம். பாடிகாவலர் பாதுகாவலும் அளிக்கப்படுமாம்.

## சட்டநாத கோயில்

இதுவும் ஒரு மிகப் பழைய கோயில்; இதற்கு இப்பொழுது முகாமைத் தர்மகர்த்தாவாய் இருப்பவர் Dr. த.நல்லைநாதபிள்ளை அவர்கள். இக் கோயிலில் ஆடி மாதம் 14-ம் திகதி அரிசனங்கள் அநுமதிக்கப்பட்டனர்.

## ஆலயப் பிரவேசம்

நல்லூரிலுள்ள புராதன ஆலயங்களில் ஒன்றாகிய கைலாயபிள்ளையார் கோவிலிற் சென்ற வெள்ளிக்கிழமை அரிசனங்கள் அநுமதிக்கப்பட்டனர். நல்லூர்க்கந்தசாமி கோயில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் முதலிய இடங்களில் நடைபெற்ற வண்ணமாக அரிசன அன்பர்கள் பத்திப் பாடல்கள் பாடி பூசை தரிசனஞ்செய்தனர். இந்த ஒழுங்குகளைச்செய்து வரும் சைவப் பெரியார்கள் பலர் சமுகமாயிருந்தனர்.

## விலைக்கிருக்கின்றது

ஏறக்குறைய பத்து அந்தர் ஈயம் (பழைய அச்செழுத்து) விலைக்கிருக்கின்றது. விற்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

வண்ணார் பண்ணை சைவப்பிரகாச அச்சு யந்திரசாலையில் பார்வையிடலாம்.

மிகக் கூடிய கேள்வியாயிருந்தபோதும் எந்த ஒரு கேள்வியையும் ஏற்கவேண்டுமென்னும் கட்டுப்பாடு அச்சகத்தாருக்கு இல்லை.

## முன்னைநாள் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. தா. இராமலிங்கம் அவர்கள் மறைவு

உடுப்பிட்டி வாசியாகிய நியாயவாதி திரு. தா. இராமலிங்கம் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்னுஞ் செய்தியை வருத்தத்துடன் வெளியிடுகின்றோம். இவர் சுருங்கிய சொற்களால் சாதகமாகப் பேசி எக்கருமத்திலும் சித்தியடையும் சிறப்பு வாய்ந்தவர். நீதி மன்றங்களிலும் இந்தமுறையிலேயே பேசி வெற்றியீட்டுவார். இவர் சர்வகலாசாலைப் பட்டம் பெற்று சிறந்த நியாயவாதியாகி, நீதிபதியுமாகி, பாராளுமன்றப்பிரதிநிதியுமாகிப் புகழுடனவாழ்ந்தார். பிரதிநிதிகள் சபையின் உபசபை உபதலைவராயிருந்த காலத்தில் உபசபைத் தலைவர் பதவியைத் திறம்பட வகித்துப் பாராட்டுப் பெற்றார். இவருடைய ஈமக்கிரியைகள் பெருந்திரளான சுற்றமித்திரர் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. பாராளுமன்றத்தில் இவருடைய சிறப்புக்களைப் புகழ்ந்து பேசி அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. நீதி மன்றங்களிலும் புகழுரைகளுடன் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. பாராளுமன்றத்திலும் பிற இடங்களிலும் பெரும் பாராட்டுக்குரியராகிய இவர் பிரிவால் நாடு பெரும் நட்டமடைந்துள்ளது.

## திலகர்தேசவுணர்ச்சி தமிழகத்திலேதேவைப்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றியும் முதலாவது உலக மகாயுத்தத்தின் போது திலகர் காட்டிய தேசாபிமான உணர்ச்சி என்றென்றைக்கும் தேசத்தொண்டர்களுக்குஒருஎடுத்துக் காட்டாகவிருக்கும். மகாத்மாகாந்தி ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கம் நடைமுறையில் வந்த அன்றே திலகர் அவர்களும் இல்லறவாழ்வை நீத்தமை அந்த இயக்கத்துக்கு ஒரு பெரும ஊக்கத்தை அளித்ததென்றே கூறலாம். ஒரு தலைவர் மறையமற்றையதலைவர்கள் அதே இயக்கத்தை அவ்வித உணர்ச்சியுடன் இயக்குவது என்பது ஒழுக்கசீலர்கள் நிறைந்த நாட்டிலேதான்முடியும். ஆகவே பாரதநாடு தலைவர்களின் ஒழுக்கப் பண்பாட்டுக்கு உதாரணமாய் இருக்கின்றதென்பதை ஈழநாட்டு அரசியல்வாதிகள் அறிந்துணர்தல் வேண்டும் என்க.

# தஞ்சைவாணன் கோவை

## சொக்கப்ப நாவலர் உரை

பொய்யாமொழிப்புலவர் பாடிய **தஞ்சைவாணன் கோவைக்குப்** பேர் பெற்ற பழைய உரையாகிய குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்பநாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பின்னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பாலபண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பாலபண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பரீட்சை, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆகியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் பயனபடக்கூடியது, நாற்கவிராஜ நம்பியகப்பொருளுரையில் இக் கோவைச் செய்யுள் முழுவதும் உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ் விலக்கணங் கற்போருக்கும் பெரிதும் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞராற் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருத்துக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன்தரத் தக்கது என்பது இதன் முதற்பதிப்பினால் அறியக் கூடிய தொன்றாகும்.

இப்புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

**விலை ரூபா : 6-00.** வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

**மனேஜர்,**
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

காரைநகர் மேற்கு சுப்பிரமணியர் பொன்னம்பலம்
வழக்காளி

Vs

இல MB 38

1. நல்லூர் கள்ளியங்காடு பொன்னையாஐயர் ஐயாத்துரைக் குருக்கள் கைம்பெண் பொன்னம்மா.
2. ஷை ஐயாத்துரைக் குருக்கள் இரததினசபாபதிக் குருககள்
3. நவாலி ஐயாத்துரைக் குருக்கள் சோமசுந்தர ஐயர்
4. நல்லூர் கள்ளியங்காடு ஐயாத்துரைக குருக்கள் ஞானசர்மா
5. நவாலி செல்லையாக் குருக்கள்சோமசுந்தரக்குருக்களும்
6. ஷை பெண் மீனும்பாள
7. இணுவில் வயிததீஸ்வரக் குருக்கள் சபாரத்தினக்குருக்களும் பெண்
8. ஷை ஞானும்பாள்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 38ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1956ம் ஆண்டு ஆவணி மாதம் 25ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று நல்லூர்இறை குருக்கள் மடம் மேற்கும் கிழக்கும் கிலப் பரப்பு பத்து (10) இது மூன்று துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட கிலப்பரப்பு 2⅓ D 152/206 ல் பதியப்பட்டும் மற்றத் துண்டு கிலப்பரப்பு 2⅓ D 157/201 பதியப்பட்டும் மற்றத் துண்டு கிலப் பரப்பு 5 D 156/230 பதியப்பட்டிருக்கிறது. இம் மூன்று துண்டுகளும் கிலப்பரப்பு பத்த (10) ஆக இதற்கு முன் D 58/90 பதியப்பட்டு ஒரே காணியாக அளக்கப்பட்டு அடுத்த அடுத்த காணிகளுடன் இருக்கிறதும் கல்வீடும் குசுனியும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் அந்தந்த துண்டுகளுக்குரிய உரிததும் வளிப் பாவிப்புரித்தும் சொல்லப்பட்ட கிலப் பரப்பு பத்து (10 க்கும் எல்லை கிழக்கு இந்தக் காணியில் இருந்து ரோட்டுக்குப் போகும் 9 சதுர அடி அகலங் கொண்ட ஒழுங்கை முகப்பும் அப்புக்குட்டி நடராசாவுககும் பங்காளருக்குமுரிய வாதனங்கள். வடக்கு கதிரேசு கிருஷ்ணரின் ஆதனம். மேற்கு தம்பையா ஐயர் இராசதம்பி ஐயரின் ஆதனம். தெற்கு தம்பையா சண்முகத்துககும் சகோதரன் தம்பையா நடராசாவுக்குரிய வாதனம். இது D 151/233 ல் பதியப்பட்டிருக்கிறது.

ஆ. ச. கந்தையா
A. S Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்
4 7-56
M. 340 3-8-56 (து 50)

## அறிவித்தல்

நல்லூர் வடக்கு
புது ரோட்டு
நம்பர், 6.

நல்லூர் வடக்கு புதுரோட்டிலிருக்கும் எனது காணி ஆறு பரப்பும் வீடும் விற்க இருப்பதனால் வேண்டியவர்கள் விண்ணப்பிக்கவும். வீடு கல்வீடு. பிரயோசனங்கள் எல்லாம் இருக்கிறது. முனிசிபல் எல்லைக்குள அடங்கியது. வீட்டுக்கு லைட், கக்கூஸ், கிணறு இருக்கிறது. வீட்டில் சொந்தக்காறருடன் பேசிக்கொள்ளலாம் விலை 28-000 ரூபா.

இப்படிக்கு
வி. அன்னலெட்சுமி
M 344 3-8-57.

## விமோசனத்துக்கு வழி

### வேற்றுமை நீக்கி வீர ஒற்றுமை .........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யும் அழைத்து அவர்கள்பால் இப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்றும் ஏகமனதாய்த் தீர்மானித்தனர்.

அதே காலத்தில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியரும். ஒரு பொதுக் கூட்டம் கூட்டிக் கட்சித் தலைவர் பலரையு மழைத்து, இதே முயற்சியிற் பெரிதும் உழைத்தனர். அவர்களும்இன்று தமிழ்ப் பேசும் பொதுமக்களிடத்திலோ, அல்லது அவர்களின் தலைவர்களிடத்திலோ கட்சி வேற்றுமைக் கிடமில்லை யென்ற உண்மையை வற்புறுத்தித் தலைவர்கள் யாவரும் இந்தக் கைங்கரியத்தில் ஒத்துழைக்கவேண்டும் என்றும், அங்ஙனம் ஒத்துழைத்துத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு அநியாயம் விளைக்கும் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து எதிர்ப்பியக்கத்தின் வழிகாட்டிகளாய் நின்று, வீரப் போர் நடாத்த வேண்டும் என்றும் தலைவர்களை வேண்டினர்.

இவ்விரு நிகழ்ச்சிகளின் விளைவாக இன்றைய கூட்டம் நடைபெறுகிறது. தலைவராகிய உங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டால் பொது மக்கள் ஆதரவு உங்களுக்கு நூற்றுக்கு நூறு வீதம் கிடைக்கும். அங்ஙனம் தலைவருக்குள் ஒற்றுமையும் பொது மக்கள் ஆதரவும் ஏற்பட்டால் எம்மை யொடுக்க முயல்வோர் உள்ளத்திலும் சிறிதாயினும் அச்சம் தோன்றும். நாட்டின் ஒற்றுமைக்காகவும், நீதியைக் கடைப்பிடிப்பதற்காகவும் தம் முயிரையும் பதவியையும் தியாகம் செய்ய முற்பட்ட எம் சிங்கள நண்பருள்ளமும், உறுதியும் சாந்தியும் பெறும். இவர்களைவிட அரசாங்கக் கட்சியிலேயே இந்தச் சட்டம் அநியாயம் என்றுணர்ந்தும் உண்மையைக் கூறத் தயங்கும் பலர் இருக்கின்றனர். எமது தலைவர்கள்பால் ஒற்றுமை யேற்பட்டால் இவர்கள்தானும் ஒருவேளை தம் மனச்சாட்சியின்படி பேசவும நடக்கவும் துணியக்கூடும்.

இன்று தமிழை ஒதுக்கக் கங்கணங்கட்டி நிற்கும் கட்சி இன்னொரு நாள் சைவத்தையும் இஸ்லாமையும் கிறீஸ்தவத்தையும் ஒதுக்க முன்வராதென்று எப்படி நம்பலாம்? சிறுபான்மையோரின் மத உரிமைகளைப் பேணுவோம் என்று இவர்களுறுதிமொழி கூறின போதும் இவர்கள்கூற்றில் நம்பிக்கை வைகக முடியாது. சிறுபான்மையோரின மொழியுரிமையைப்பற்றி திரு. பண்டாரநாயக்கா, திரு. பிலிப் குணவர்த்தன, திரு. எம். டபிள்யூ. எச். டி. சில்வா போன்றோர் கூறிய உறுதிமொழிகளை அவர்கள் மறந்தபோதிலும் நாம் மறக்கவில்லை. ஆதலால் தமிழர் உரிமைக்காக நாம் தொடங்கும் சாத்துவிகப் போர், சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக நடத்தவேண்டிய எதிர்ப்பியக்கத்தின் முதல் முனைப்பாயிருக்கலாம்.

ஆகையால் எங்ஙனம் ஆராய்ந்து பார்த்தாலும் உங்கள் ஒற்றுமை இன்றியமையாத ஒன்று. பொது மக்கள் ஒற்றுமைக்கு உங்கள் ஒற்றுமையே வழிகாட்டவேண்டும். உங்கள் ஒற்றுமையால் பொது மக்கள் ஆர்வமும் அபிமானமும் உறுதிபெறும். தமிழர்தம் மானம் குன்றாது தலை நிமிர்ந்துவாழ்வர். தமிழ்ப் பேசும் ஏனையோரும் அங்ஙனமே தம் உரிமைகள் பேணப்பெற்றன என்று இறும்பூதடைவர். மற்றச் சிறுபான்மை இனங்களும், தம் உரிமைகள் பறிபோகாவென்று துணிய இடம் வரும். எம்மை ஒடுக்கவும எமதுரிமைகளைத் துண்டிக்கவும் முற்படுவோர், தம் முயற்சி கைகூடுமோ என்று ஐயப்படுவர். ஆகையால் உங்கள் பொறுப்பு பாரதூரமான பொறுப்பு. இந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்பீர்களென்று நம்புகிறோம். பணிவுடன் வேண்டுகிறோம். பொறுப்பை ஏற்றுத் தமிழ்ப்பேசும் மக்களின் மானத்தைப் பேண, வீரத்தொண்டு ஆற்றுவீர்களென்றும், நீங்கள் ஆற்றிய தொண்டு என்றென்றும் எம்சரித்திரத்தில் மங்காப் புகழ்பெற்று நிற்கும் என்றும் கூறி என் முன்னுரையை முடிக்கின்றேன்.

—0—

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராகாகிருஷ்ண கணிபதி.

[ இவ்வாரப் பலன்கள் 5—8—56 —— 11—8—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நீர்இந்த வாரம் சண்டைதொடுக்க முந்துவீர். ஆனல் பெரும் ஆபத்தான விளைவுகள் உண்டாக மாட்டா. சகோதர சகோதரிகளிடமிருந்து இலாபங்கள் நிச்சயம். வார இறுதிக்கு முன் சில காணிக் கருமங்களும் நிறைவேற்றப்படும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பச் சிக்கல்கள் நீக்கப்படாமல் இன்னும் தொடர்ந்திருக்கும். உத்தியோகத் துறையில் நல்ல வாரம். உம்முடைய பகைவரை நீர் வெல்லககூடியதா யிருககும். தனலாபங்களும் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

உம்முடைய சிக்கல்களை நீர் இந்தவாரம் இலகுவாக நீக்கக் கூடியதாயிருக்கும். தனலாபங்களும் நிச்சயம். சில சண்டைகள் அல்லது குழப்பங்கள் உண்டாகக் கூடும். ஆனல் அவை ஆபத்தானவையாயிருக்கமாட்டா.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. நீர் கூடிய பாரங்கள் சுமத்தப்படுவீர். உம்முடைய பிதாவழி இனத்தவர் உமக்குச் சில குழப்பங்களை உண்டாக்ககூடும். பணத் துறையில் நல்ல வாரம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

உம்முடைய இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக்கிடமுண்டு. ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். புது முயற்சிகள் எதிர்பார்த்திருந்த பலனைத்தரா. செலவதிகரிக்கும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தனலாபம் நிச்சயம். புது முயற்சிகள் சித்தியடையும். நண்பர் அதிக உதவியாயிருப்பர். பகைவர் அழிவும் வழக்கில் வெற்றியும் நிச்சயம்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உம்முடைய மனம் இந்தவாரம் ஆறுதலாயிருக்கமாட்டாது. மற்றவர்களுடைய கருமங்கள் பற்றி நீர் வருந்துவீர். தனலாபம் நிச்சயம், செலவும் அதிகமாயிருக்கும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. குடும்பச் சிக்கல்கள் நீக்கப்படாமல் தொடர்ந்திருக்கின்றன, நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. எழுத்தில் நீர் உம்மைக் கட்டுப்படுததிவிடவேண்டாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் குடும்பக் கருமங்கள் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. கந்தோரில் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு. சுகவீனங்களுக்கிடமுண்டு. ஆனல் பணததுறையில் நல்லவாரம்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

முதல் இருநாட்களும் புது முயற்சிகளுக்கு நல்லனவாகும். செவ்வாய் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்கவும் வார இறுதியில் புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

இந்தவாரம் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. முதல் அரைவாரம் பணத்துறையில் நல்லாயிருக்கும் வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

மனச்சமாதானமிருக்கமாட்டாது. குடும்பத் தொந்தரவுகளுக்கிடமுண்டு தேக சுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது ஆராயாது கருமஞ் செய்வதைத் தவிர்க்கவும்.

## ஏலவிற்பனை — சாக்குகள்

1956 ஆண்டு ஆவணி மாதம் 18ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் கீழ் குறிப்பிடப்பெற்ற சாக்குகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2 சித்தி பெறும் கேள்விக்காரர் கேள்வியின்படி செலுத்த வேண்டிய தொகையில் நாலில் ஒரு பங்கை உடனே விற்பனை நடாததும் உததியோகஸ்தரிடம் செலுத்தி தற்காலிக பற்றுச்சீட்டுப் பெறவேண்டும் கேள்விப்படி செ த்தவேண்டிய தொகை முழுவதையும் செலுத்த விரும்புவோர் பணததைச் செலுத்தி தற்காலிக பற்றுச் சீட்டுப் பெற வேண்டும். பின் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அக் கேளவியோ கேள்விகளோ தமது அங்கீகாரம் பெற்றுவிட்டனவென்று அறிவிததல் செய்த, மூன்று நாட்களுக்குள் மிகுதித் தொகையை யாழ்ப்பாணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெறவேண்டும். முழுத் தொகையையும் கட்டி. கச்சேரியில் பற்றுச்சீட்டுப் பெற்ற திகதியிலிருந்து மூன்று நாட்களுள் சாககுகள் பண்டகசாலையிலிருந்து எடுககப்படவேண்டும்.

3. சித்தியெய்துங் கேள்விக்காரர் மேலே காட்டியபடி முழுத் தொகையையுஞ் செலுத்திச் சாக்குகளை அவ்வப் பண்டகசாலைகளிலிருந்து எடுக்கத் தவறுவாரேல் அவ்வக் கேள்விக்காரர்களுக்கு நஷ்டமாகும் வகையில் குறிதத சாக்குகள் அகற்றப்பெறும்.

"சி" இனச் சாக்குகள்

| விநியோகப்பண்டகசாலை | அளவு | இனம் | தொகை |
| --- | --- | --- | --- |
| யாழ்ப்பாணம் | 112 கொத்து | "சி" | 4172 |
| யாழ்ப்பாணம் | 80 கொத்து | "சி" | 4095 |

கச்சேரி,
யாழ்ப்பாணம், 27-7-56.

S. Arumugam
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக
(G. 63, 3-8-56)

வானமுகில் வழாதுபெயக மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 8.8-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.